# கிறிஸ்தவராகிய என் உறுதிமொழி

வெட்கப்படாத ஐக்கியத்திற்கு பங்காக இருக்கிறேன். கோடு தாண்டி கால் வைத்து விட்டேன். தீர்மானம் எடுக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்துவினுடைய சீஷனாய் இருக்கிறேன். திரும்பி பார்க்கமாட்டேன், சோர்ந்துபோகமாட்டேன், மெதுவாகமாட்டேன், பின்பாக போக மாட்டேன், அல்லது அமர்ந்து இருக்க மாட்டேன். என் கடந்த காலம் மீட்கப்பட்டது, என் நிகழ்காலம் அறிவை உணர்த்துகிறது, என் எதிர்காலம் பத்திரப்படுத்தபட்டிருக்கிறது.

தாழ்ந்த வாழ்க்கை, பார்வைக்கேற்ப நடப்பது, சிறிய திட்டம், மிருதுவான முழங்கால்கள், வர்ணமில்லாத கனவுகள், அடக்கப்பட்ட தரிசனங்கள், சராசரி பேச்சு, மலிவான வாழ்க்கை, அற்பமான நோக்கங்கள் என்று வாழ்ந்து முடித்துவிட்டேன்.

இனி முக்கியத்துவமோ, செழிப்போ, ஸ்தானமோ, உயர்வுகளோ, புகழ்ச்சியோ, எனக்கு தேவையில்லை.

சரியாகவோ, முதலாவதாகவோ, உயர்வாகவோ, அங்கிகரிப்பதற்காகவோ, போற்றப்படுவதற்காகவோ, பலனை எதிர்ப்பார்க்கவோ, தேவையில்லை.

இப்போது விசுவாசத்தில் வாழ்கிறேன், அவருடைய பிரசன்னத்தில் சாய்ந்து கொள்கிறேன், பொறுமையோடு நடக்கிறேன், ஜெபத்தினால் உயர்த்தபடுகிறேன், மற்றும் பெலத்தினால் பிரயாசப்படுகிறேன்.

எக் முகம் நேராகிவிட்டது, என் நடக்கும் விதம் வேகமாய்மாறிவிட்டது, என் நோக்கம் பரலோகம், என் சாலை குறுகலானது, என் வழி கடினமானது, என்னுடன் வருபவர்கள் சிலர், என்னை நடத்துபவர் நம்பிக்கைக்குறியவர், என் ஊழியம் தெளிவாய் இருக்கிறது.

என்னை வாங்க முடியாது, ஏமாற்ற முடியாது, தாமதப்படுத்த முடியாது.

தியாகம் செய்வதற்கு பின் வாங்க மாட்டேன், துரோகிகளுக்கு முன்பாக தயங்கமாட்டேன், சத்துருவின் பந்தியில் அமர்ந்து பேச்சுவார்த்தை செய்ய மாட்டேன், சாதாரனத் திறமையுள்ளவனுடைய சிக்கலான பாதையில் சேரமாட்டேன்.

கிறிஸ்துவுக்காக தரித்திருந்து, சேகரித்து, ஜெபித்து, விலைக்கிரையம் செலுத்தி, பிரசங்கிக்கிறவரைக்கும் சோர்ந்து போகமாட்டேன், வாயை மூடமாட்டேன், விட்டுகொடுக்கமாட்டேன். இயேசுவினுடைய சீஷனாய் இருக்கிறேன்.

அவர் வருகிற வரையில் நான் போக வேண்டும், வீழ்ச்சி வரையில் கொடுக்க வேண்டும், எல்லோரும் அறிகிற வரையில் பிரசங்கிக்க வேண்டும், அவர் என்னை நிறுத்துகிற வரையில் ஊழியம் செய்ய வேண்டும்.

தன் சொந்தத்திற்காக அவர் வரும் போது, என்னை அடையாளம் கொள்வதற்கு அவருக்கு பிரச்சனை இருக்காது - என் கொடி தெளிவாயிருக்கும்.